**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 77 of 2020

Deposition of P.W.1

Name of the Witness: திரு.கணேசன்

Date : 18.09.2025

***2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை***

வா.சா.ஆ.1 படி எங்கள் குடும்பத்தில் பாகபிரிவினை ஏற்பட்டது. அந்த பாகபிரிவினை பத்திரம் படி எனக்கு இ அட்டவணை சொத்தும், 1ம் பிரதிவாதிக்கு சி அட்டவணை சொத்தும், 2ம் பிரதிவாதி டி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களுக்கு அவர் அவர் பட்டா பெற்று அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு அந்த பாகபிரிவினையில் ஏ அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் அப்பா வா.சா.ஆ.2 உயில் மூலமாக அவருக்கு பாகபிரிவினையில் ஒதுக்கப்பட்ட ஏ அட்டவணை சொத்து சம்மந்தமாக எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் ஏ, பி, சி என பிரித்து உயில் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1.11.1995ல் என் அப்பா இறந்து விட்டார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு பிறகு உயில் நடைமுறைக்கு வந்து அதன் படி உயில்கண்டுள்ள சொத்து படி அனுபவித்து வருகிறோம்.

2) 2ம் பிரதிவாதிக்கு உயிலின் படி ஒதுக்கப்பட்ட பி அட்டவணை சொத்தின் சர்வே எண் 76/2 கம்பைநல்லூர் கிராமம், பாரூரில் அமைந்துள்ளது. அந்த உயிலில் 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட பி செட்டியூல் சொத்திற்கு சொத்து விவரத்தில் ராஜாமணி உயில் பாக நிலத்திற்கு கிழக்கு, என் உயில் பாகத்திற்கு மேற்கு, மொரப்பூர் ரோட்டிற்கு வடக்கு, கலாஏரிகாணைக்கு தெற்கு இதற்கு மத்தியில் 0.88 சென்ட் நிலமும், அதிலுள்ள கிணறும், மோட்டாரிலும் 1/3 பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கம்பைநல்லூர் கிராம சர்வே எண் 244/1, 0.79 சென்ட் சொத்து விவரத்திற்கு செக்குபந்தி ராஜாமணி நிலத்திற்கு மேற்கு, வடக்கு, ராஜாமணி வீட்டிற்கு முன்புறம் அமைந்துள்ள காலி ஜாகாவிற்கு கிழக்கு, மொரப்பூர் ரோட்டிற்கு தெற்கு இதற்கு மத்தியில் கீழ் மேல் 11 மணி, தென்வடல் 22 அடி மொத்தம் 242 சதுரடியில் உள்ள மங்களூர் ஓட்டு வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 2வது தாக்காக மேற்சொன்ன அதே சர்வே எண்ணில் நிலம் 22 சென்ட்டும், செக்குபந்தி கணேசன் உயில் பாக நிலத்திற்கு சாமில்லிற்கு தெற்கு, குப்பன் நிலத்திற்கு வடக்கு, கணேசன் உயில் பாக நிலத்திற்கு கிழக்கு, ராஜாமணி பாக நிலத்திற்கு மேற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். காந்தனுக்கு ராஜாமணி பாகத்தில் உள்ள புளியமரங்கள் எல்லாம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் காந்தன் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

3) 1ம் பிரதிவாதி ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றார். அவர் படித்தவர், விவரமான ஆள் என்றால் சரிதான். உயிலில் காந்தனுக்கும் எனக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் அவர் மோசடியாக பட்டா வாங்கியுள்ளார். என்னிடமும் உயிலில் ஒதுக்கப்பட்ட சி செட்யூல் சொத்துக்களும், காந்தனுக்கு ஒதுக்கப்பட்ட டி செட்யூல் சொத்துக்களும் அவர் அவர் அனுபவத்தில் இருந்த போதும் பட்டாவை காந்தன் மோசடியாக அவர் பெயரில் வாங்கியுள்ளார். என் அப்பா பாகபிரிவினை பத்திரத்தில் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவருடைய தனிப்பட்ட சொத்தாக பாவித்து எனக்கும், 1, 2, பிரதிவாதிகளுக்கும் விருப்பப்பட்டு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி கொடுத்தார். உயில் 1992ல் எழுதப்பட்டது, 1995ல் என் அப்பா இறந்தார், உயில் எழுதும் போது நல்ல நிலையிலும், விருப்பத்துடன் எழுதி கொடுத்தார். 1ம் பிரதிவாதிக்கு உயிலில் எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் எந்த உரிமையும் கிடையாது. பட்டா மோசடியாக மாற்றி கொண்டு அராஜகமாக எங்களின் சொத்துக்கள் மீது உரிமையை மறுக்கிறார். நானும், 2ம் பிரதிவாதியும், 1ம் பிரதிவாதிக்கு எந்த ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை. உயிலில் காந்தனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தான். அதில் எனக்கோ 2ம் பிரதிவாதிக்கும் எந்த உரிமையும் கிடையாது.